[1979 நவம்பர் 5

சாமல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*வினா எண். 110 திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம் சாமல்பட்டியில் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிட வேலை ஆரம்பித்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் யாது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) மற்றும் (ஆ)

இப்பள்ளிக்கான கட்டிட பணி பள்ளியின் கட்டிட குழுவினரால் செலவு ஏற்கப்பட்டு 1972ம் ஆண்டு துவங்கப்பட்டது. கட்டிடக்குழு தொடர்ந்து செலவழிக்க இயலாததால், பணி 1974-ம் ஆண்டு நிறுத்தப்பட்டது. புதிய கட்டிட குழு அமைக்கப்பட்டு வேலைகள் மீண்டும் 1979ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் துவங்கப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிடங்களில் இருக்கிற இடநெருக்கடி காரணமாக கீத்துக்கொட்டகைகளைப் போட்டு பள்ளிகளை நடத்தும் நிலை இருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு போதிய கட்டிடங்களைக் கட்ட முன் வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைமையை அனுசரித்து அப்படிப்பட்ட பிரச்னைகள் கவனத்தில் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இம்மாதிரி கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்படுகிறபோது, முன்னாலேயே அனுமதிக்கப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் இதுவரையில் கட்டப்படாமல் இருக்கின்றனவே, அவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? குறிப்பாக நான் அடிக்கடி கேட்டு வரும், மாயூரம் பகுதியில் உள்ள திருமங்கலம் அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் எப்போது கட்ட இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம் சாமல்பட்டியில் அரசு உயர் நிலைப்பள்ளி கட்டிட வேலை ஆரம்பித்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. மாயூரம் பகுதியில் உள்ள

1979 நவம்பர் 5]

திருமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளி குறித்த விவரங்கள் தேவைப்படுமானால், தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே பேரவைத் தலைவருக்குப் பதில் சொல்லுங்கள். கேள்வி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியப் பள்ளியைப் பற்றியது, ஆகவே, அதற்கு மட்டும்தான் பதில் இருக்கும். மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு கண்வலி ஏற்பட்டு, அதனால் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சோமசுந்தரம் அவர்களும் அதிக கண்வலியோடு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு கண்வலி இருக்குமானால் அவர்களும் போய் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கண்வலி உள்ளவர்கள் அவர்களாக வராமல் இருக்கு வேண்டுமே தவிர நீங்களாகத் துரத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறருக்குத் தொற்றக் கூடியது, பரவக் கூடியது. ஆகவே, மற்றவர்கள் ஆட்சேபிக் கிறார்கள். நானாகத் துரத்தவில்லை. மற்ற உறுப்பினர்கள் குறிப்பிடுவதால் சொல்கிறேன், நோய் உள்ளவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளட்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, போகிற போக்கை பார்த்தால் எல்லோருக்கும் கண்வலி வந்துவிடும்போல் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மூலக்கேள்வி சாமல்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தைப் பற்றியது என்றாலும் மாண்புமிகு ஆளும்கட்சி கொறடா அவர்கள் அந்தக் கேள்வியை வேறு வகையிலே கூரைக் கட்டிடமாக இருப்பவை மாற்றியமைக்கப்படுமா என்று கேட்டார்கள். ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு இருக்கிற உரிமையில் ஓரளவாவது எதிர்க் கட்சிக்கும் இருக்கும் என்பதால் கேட்டேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்தது, பொதுநோக்கோடு சொன்னதால்தான். பொதுவாக உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கூரை வீடுகளாக இருக்கின்றன; அதற்குப் பதிலாக அவை நல்ல கட்டடங்களாக அமைக்கப்படுமா என்று ஓட்டு மொத்தமாகக் கேட்டார்கள். ஆனால் நீங்கள் மாயூரத்திலே சுட்டிக்காட்டிக் கேட்கிறீர்கள். நீங்கள் கேட்பதற்கு தகவல் இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. உங்களுடைய கேள்வி குறிப்பிட்ட இடத்தைப்பற்றியது.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, மாயூரத்தைச் சேர்ந்த திருமங்கலம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளி கூரைக் கட்டடத்தில் இருக்கிறது. அதை மாற்றி, அசல் கட்டடமாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, இதுகுறித்து முதலில் கொறடா அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்திருக்கிறேன். ஆகவே, அது இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு கொடுத்து உதவக் கூடிய பணத்தை எந்த அடிப்படையில் ஒதுக்குகிறார்கள்? குறிப்பாக, இத்தனை வருஷ காலம் உயர்நிலைப்பள்ளி நடைபெற்றால் அதற்கு என்று வரன்முறை ஏதாவது வைத்திருக்கிறார்களா? அல்லது எந்த வரன்முறையின் அடிப்படையிலே பணம் ஒதுக்கப்படுகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களிலே பள்ளிகளுக்கு நல்ல கல் கட்டடம் கட்டுவதற்கு அங்கே டெண்டர் விடும்போது, அது கட்டுப்படியாகவில்லை என்ற நிலையிலே இருக்கிறது; தமிழ்நாடு முழுவதும் அந்த நிலைதான் இருக்கும். ஆகையால் கான்ட்ராக்டர்கள் டெண்டர் கேட்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, அதை திரும்பவும் பரிசீலனை செய்து, நல்லமுறையில் அவர்கள் எடுத்துக்காட்டக் கூடிய வகையில் தொகையை உயர்த்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 நவம்பர் 5]

திரு. பொ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேல் நிலை பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்ட பின், சில இடங்களில் சில பள்ளிகளை அரசே மேல் நிலைப் பள்ளிகளாக அறிவித்திருக்கின்றன. அப்படி அறிவிக்கப்பட்ட பள்ளிகளிலும் அங்கே படிக்கின்ற மாணவர்கள் ஆங்காங்கே தரையில் உட்கார்ந்துக் கொண்டு படிக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக ஃபர்னிசர் போன்ற வசதிகளை ஏற்படுத்தி தர அரசு ஏற்பாடு செய்வதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை அரசு பரிசிலித்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 111, 112 இரண்டும் உள்ளாட்சி துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

செயற்கை வைரத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம்

*வினா எண் 113 திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை வைர தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு கூலி நிர்ணயம் செய்வது பற்றிய குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) செயற்கை வைரத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்து அரசுக்கு ஆலோசனை கூற 16.5.79 அன்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு ஆணை எண் 816-ல் ஓர் ஆலோசனைக் குழுவினை ஏற்படுத்தியுள்ளது. அந்தக்குழு அறிக்கை அனுப்பிய பிறகு அரசு அந்த அறிக்கையை ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே செயற்கை வைரம் வெட்டும் தொழிலாளர்கள் திருச்சி மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியிலே தான் அதிகமாக இவ் வேலை செய்கிற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் காலை 7 மணிக்குப் போனால் இரவு 7 மணி வரைகூட வேலை செய்தும் அதற்கு கூலியாக ரூபாய் 5-க்கும் குறைவாகதான் ஊதியம் பெறுகிறார்கள். எனவே தொழிலாளர்